தமிழர் நினைவேந்தல் அகவம் - சுவிஸ்
Tamilar Remembrance Foundation - Swiss
Postfach 439, 4528 Zuchwil
www.maveerarnaal.ch trfswiss@gmail.com

**10 வயதுப்பிரிவு**
(01.01.2008 – 31.12.2008 வரையில் பிறந்தோர்)

## தமிழீழத்தின் அடிக்கற்கள்

தமிழீழ தேசத்தின் விடுதலை வேண்டி எம் தலைவர் மாமா நடத்திய விடுதலைப் போரின் வீரமும், வெற்றியும் தமிழர் வரலாற்றின் உன்னதமான பதிவுகளாக இருக்கின்றன. தன் இனத்தின் விடுதலைக்காகத் தன்னலம் பாராது மக்களையும் தாய்மண்ணையும் உயிராக விரும்பும் விடுதலை அமைப்பைக் கட்டியெழுப்பியவர் அவர்.

தலைவர் மாமாவோடு தொடக்க காலத் தோழர்களாக, விடுதலைப் போராட்டத்திற்குத் தோள் கொடுத்த வீரர்களாக, வரலாற்றிலே நீங்காது இடம்பெறும் தளபதிகளாக இருப்பவர்கள் பலர். அவர்களின் தீரம் மிகுந்த போர்த்திறனும், அளப்பரிய தியாகமும் எமது தாயகத்தின் விடுதலையை முன்னகர்த்திச் சென்றன.

இத்தகைய ஆற்றலுடைய முதல் மாவீரரான லெப்டினன் சங்கர் மற்றும் லெப்டினன் சீலன், வீரவேங்கை ஆனந், லெப்டினன் செல்லக்கிளி, கப்டன் லாலா ரஞ்சன், லெப்டினன் பரமதேவா, கப்டன் பண்டிதர், கப்டன் றெஜி, மேஜர் அல்பேட், கப்டன் லிங்கம், லெப்டினன் கேணல் விக்ரர், மேஜர் கணேஸ், லெப்டினன் கேணல் பொன்னம்மான், லெப்டினன் கேணல் குமரப்பா, லெப்டினன் கேணல் புலேந்திரன், லெப்டினன் கேணல் சந்தோசம், கேணல் கிட்டு, லெப்டினன் கேணல் அப்பையா உள்ளிட்ட மாமாக்கள் பலர் இருந்தனர். இவர்களே தமிழீழத்தின் அடிக்கற்களாகத் திகழ்கின்றனர்.

இவர்களுடைய வீரமும், நுண்ணறிவும், நாட்டுப்பற்றும், தலைவர் மாமா மீது கொண்டிருந்த அளவிட முடியாத அன்பும் நம்பிக்கையும் தமிழீழ விடுதலைப் போராட்டம் பல நெருக்கடியான சூழல்களையும் சவால்களையும் வென்று நிலைபெறுவதற்கு வேர்களாக இருந்தன. இவர்களில் பலர் சிறிலங்கா அரச படைகளும், இந்திய இராணுவமும் கூட்டாக எம் மண்ணில் நிகழ்த்திய கொடுமைகளுக்கெல்லாம் முற்றுப்புள்ளி வைத்து, இந்திய இராணுவத்தை எங்கள் தாயக மண்ணை விட்டு விரட்டியடிப்பதற்குக் காரணமாக இருந்தார்கள்.

எங்கள் தமிழீழம் வீரத்தின் விளைநிலம். அதனால் தான் தமிழீழத்தின் அடிக்கற்களான மாவீரர்களின் பெயர் சொல்லி படையணிகளை உருவாக்கினார் தலைவர் மாமா. “வெல்லும் வரை செல்வோம்” என்ற உறுதியுடன் சொல்லிச் சொல்லி அடித்த வரலாறுகளை நெஞ்சில் விதைப்போம். அவர்கள் கனவுதனை எமதாக்குவோம். தமிழீழம் மீட்போம்.

நன்றி,

வணக்கம்.